(2022) 7 S.C.R 493

சிவ் குமார்

/எதிர்/

மத்திய பிரதேச மாநிலம்

(குற்றவியல் மேல் முறையீட்டு எண் 1503/2022)

செப்டம்பர் 7, 2022

(மாண்புமிகு நீதியரசர்கள் திரு. கே.எம்.ஜோசப் மற்றும் திரு. கிரிஷிகேஷ்ராய்)

தண்டனைச் சட்டம், 1860, பிரிவு 411, நேர்மறையற்ற முறையில் திருடப்பட்ட சொத்தை பெறுதல்- குற்றம் சாட்டப்பட்ட மேல்முறையீட்டாளரும், உடன் குற்றம் சாட்டப்பட்டவரும், கொள்ளையடிக்கப்பட்ட சரக்கு வண்டியிலிருந்த பொருட்களை அவை திருடப்பட்டவை என்று தெரிந்தே பெற்றுள்ளனர் என்பது அரசு தரப்பு வழக்கு- விசாரணை நீதிமன்றம் பிரிவு 411 ன் கீழ் இருவருக்கும் தண்டனை வழங்கியுள்ளது- அந்த தண்டணையை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது - மேல் முறையீட்டில் வழங்கப்பட்ட தீர்ப்பு: ஒருவர் திருடப்பட்ட சொத்தை கையாளுகிறார் என்பதை நிறுவ " நம்பிக்கை " என்ற காரணி முக்கியமானதாகும் - குற்றம்சாட்டப்பட்டவர் அலட்சியமாக இருந்தார் அல்லது சொத்தானது திருடப்பட்டது என்று அவர் என்ன காரணம் இருந்தது அல்லது அவர் பெற்ற சொத்தின் தன்மையை குறித்து போதுமான விசாரணையை செய்ய தவறிவிட்டார் ஆகியவை மட்டுமே குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு அரசு தரப்பிற்கு போதுமானதாக இராது - வழக்கு சொத்தை முதலில் வைத்திருப்பது சட்ட விரோதமற்றதாக இருக்கலாம் - ஆனால் அதனை திருடப்பட்டது என்பதை தெரிந்திருந்தும் வைத்திருத்தல் குற்றத்திற்குரியதாகும்:- மேல்முறையீட்டாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களின் மதிப்புகள் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையிலும் கைப்பற்றுதல் மகஜரிலும் வேறுபாடாக

உள்ளது - மேலும் மேல்முறையீட்டாளர் வழக்கமாக தனது கடையில் பாத்திரங்களை விற்பனை செய்துள்ளார் - எனவே, அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்களை அவர் வைத்திருந்தது இயற்கைக்கு மாறானதாக இருக்கவில்லை - கைப்பற்றுதல் மகஜரில் முத்திரை இல்லாததும் சாட்சிகளின் சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகளும் கைப்பற்றுதல் குறித்த ஆதாரங்களை முற்றிலுமாக நம்ப முடியாததாக்கிவிட்டது - பாத்திரங்களை மிக குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதால் மட்டுமே அவை திருடப்பட்டவை என்று மேல் முறையீட்டாளருக்குத் தெரியும் என்ற முடிவிற்கு வர இயலாது - எனவே, மேல் முறையீட்டாளருக்கு அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் திருடப்பட்டவை என்று தெரியும் என்பதனை அரசு தரப்பு நிரூபிக்க தவறிவிட்டது - இதச பிரிவு 411 ன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனை ஒதுக்கி வைக்கப்படுகிறது.

மேல் முறையீடு அனுமதிக்கப்பட்டு கீழ் கண்ட தீர்ப்புவழங்கப்பட்டுள்ளது :-

தீர்ப்பு: 1) ஒருவர் திருடப்பட்ட சொத்தை கையாள்கிறார் என்பதை நிறுவ "நம்பிக்கை" என்ற காரணி முக்கியமானதாகும். வெற்றிகரமான அரசு தரப்பு வழக்கிற்கு குற்றம்சாட்டப்பட்டவர் அலட்சியமாக இருந்தார் அல்லது சொத்தானது திருடப்பட்டது என்று அவர் எண்ண காரணம் இருத்தல் அல்லது அவர் பெற்ற சொத்தின் தன்மையை குறித்து போதுமான விசாரணையை அவர் மேற்கொள்ள தவறிவிட்டார் என்பது மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றத்தை நிரூபிக்க போதுமானதாக இருக்காது. வழக்கு சொத்தை முதலில் வைத்திருப்பது சட்டவிரோதமற்றதாக இருக்கலாம். ஆனால் அதனை திருடப்பட்ட சொத்து என்று தெரிந்திருந்தும் வைத்திருத்தல் குற்றத்திற்குரியதாகும்.

2) மேற்சொன்ன கண்ணோட்டத்தின் படி, மேல் முறையீட்டாளர் திருடு போன சொத்துக்களை தான் அவர் கையாண்டிருந்தார் என்பது பற்றி அவருக்கு தெரியும் என்பதனை அ.சா.5., அ.சா.22 மற்றும் அ.சா.24 ஆகியோர்களின் சாட்சியங்களை

வாயிலாகவும் குறிப்பாக கைப்பற்றுதல் மகஜரில் வாயிலாகவும் நிரூபிக்கப்பட்டிருப்பதாக அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. கோபால் ஜா அவர்கள் சுட்டிக்காட்டினார். முக்கியமாக இதில் MP 09/D0559 என்ற எண் கொண்ட சரக்கு வண்டியில் ஏற்றப்பட்ட சரக்குகளின் (பாத்திரங்கள், துணிகள், உள்ளாடைகள் மற்றும மின்சாதனப்பொருட்கள்) மொத்த மதிப்பானது ரூபாய் 12,50,000/- என்று FIR No 407/2003. 02.06.2003)ல் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் 27.6.2003 தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் மேல்முறையீட்டாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களின் (எ..கு பொருட்கள், டார்ச், அலுமினியப் பெட்டி) மதிப்பு வெறும் ரூ.20,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்தின் மதிப்பானது வேறுபாடு உடையதாலும் நிகரற்றதாக உள்ளதாலும் இதச பிரிவு 411 ன் கீழான குற்றச்சாட்டினை அவை ஆதரிப்பதாக இல்லை. மேலும் மேல்முறையீட்டாளர் வழக்கமாக தனது கடையில் பாத்திரங்களை விற்பனை செய்துள்ளார். எனவே அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்களை அவர் வைத்திருந்தது இயற்கைக்கு மாறானதாக இருக்கவில்லை.

3) மேலும் பரத்சிங் தாக்கூர் (அ.சா.22) என்ற சார்பு ஆய்வாளர், பன்னாகார் என்பவருக்கு துணிகள் மற்றும் பாத்திரங்கள் மிக குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டது பற்றி தகவல் கிடைத்துள்ளது. அ.சா.22 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அவரது கையொப்பத்தை நிரூபிக்கும் சமயத்தில் குற்றம் சாட்டப்பட்ட சிவகுமார் பாத்திரக்கடை வைத்திருப்பதாகவும், குறிப்பாக அவசரத்தினால் கைப்பற்றுதல் மகஜரில் (அ.சா.ஆ 4) முத்திரை குத்த வில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். கைப்பற்றுதல் மகஜர் தயாரிப்பதில் குறைபாடுள்ள நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது என்பது அ.சா.22 - ன் சாட்சியத்தின் வாயிலாக தெரிகிறது. முக்கியமாக மேல்முறையீட்டாளருக்கு வண்டியிலிருந்து திருடப்பட்ட பொருட்களுக்கும் அவர் பெற்ற பொருட்களுக்கும் தொடர்பு

இருப்பதாக தெரியும் என்பது பற்றி அ.சா.22 ன் சாட்சியத்தில் நிறுவப்படவில்லை.

4) சாட்சிகள் நிதின் ஜெயின் (அ.சா.5) , சார்பு ஆய்வாளர் பரத்சிங் தாக்கூர் (அ.சா.22) மற்றும் சார்பு ஆய்வாளர் ஜி.பி.திவாரி (அ.சா.24) ஆகியோர்களின் சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகளும் பளிச்சென்று தெரிகின்றன. உதாரணமாக அ.சா.5 ன் சாட்சியத்தின்படி பாத்திரங்கள் சார்பு ஆய்வாளர் ஜி.பி.திவாரியால் (அ.சா.24) அ.சா.5 ன் முன்னிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. இருப்பினும் சார்பு ஆய்வாளர் ஜி.பி.திவாரி (அசா.24) அதிகார வரம்பு பற்றாக்குறையால் எந்த சொத்தையும் தான் கைப்பற்றவில்லை என்றும் கைப்பற்றுதலானது பனகார் காவல் நிலையத்தால் தான் செய்யப்பட்டிருக்க வேண்டுமே தவிர சாட்னாவிலுள்ள கோட்வானி காவல் நிலைய அதிகாரியால் அல்ல என்றும் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். இதனைத் தாண்டி ஆச்சரியமிக்க வகையில் கைப்பற்றுதல் நடவடிக்கையின் போது அ.சா.24 சிவகுமாரின் வீட்டில் இருக்கவில்லை என்பது குறித்து சார்பு ஆய்வாளர் ஜி.பி திவாரியின் (அ.சா24) சாட்சியத்தை சார்பு ஆய்வாளர் பரத்சிங் தாக்கூர் (அ.சா.22) தழுவி சாட்சியமளித்துள்ளார். நிதின் ஜெயினை (அ.சா.5) சிவகுமார் வீட்டில் கைப்பற்றுதல் நடவடிக்கையின் போது சாட்சியாக இருக்க அ.சா.24 அழைக்கவில்லை என்றும் மறுத்துள்ளார். மேலும், சார்பு ஆய்வாளர் ஜி.வி.திவாரி அவரால் எழுதப்பட்ட கைப்பற்றுதல் மகஜரை அவரது சாட்சியத்தின் மூலம் ஆதரிக்கவில்லை . மேற்படி குறைபாடுகள் மூலம் கைப்பற்றுதல் குறித்த சாட்சியங்களானது முற்றிலும் நம்பத்தகுந்ததாக இல்லை.

5) தற்போதைய சூழ்நிலைகளுக்கு முன்மொழியப்பட்ட சட்ட முன்மொழிவை பயன்படுத்தும் போது, மேல் முறையீட்டாளரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட

பொருட்களானது திருடப்பட்டவை என்று அவருக்குத் தெரியும் என்பதனை அரசு தரப்பு நிரூபிக்க தவறிவிட்டது என்பதே தீர்க்கமான முடிவு ஆகும். இதச பிரிவு 411 ன் கீழான குற்றச்சாட்டினை மேல் முறையீட்டாளருக்கு எதிராக நிரூபிக்க தேவையான அத்தியாவசியக் கூறுகள் நிறுவப்படவில்லை. இது தவிர, மேல்முறையீட்டாளருக்கு பாத்திரங்கள் திருடப்பட்டவை என்பது பற்றிய அறிவு இருந்ததற்கான ஆதாரமாக ஒரு குற்றம் சாட்டப்பட்டவரின் வெளிப்படுத்துதல் அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. மேல் முறையீட்டாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பாத்திரங்கள் திருடப்பட்டவை என்பது பற்றி அவருக்கு தெரியும் என்பதற்கான எவ்வித அடிப்படை ஆதாரத்தையும் அரசு தரப்பு நிரூபிக்க தவறிவிட்டது. பாத்திரங்கள் மிக குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதால் மட்டுமே அவை திருடப்பட்டவை என்று மேல் முறையீட்டாளருக்குத் தெரியும் என்ற முடிவிற்கு வர இயலாது. இதச பிரிவு 411 ன் கீழான குற்றச்சாட்டிற்குரிய ஆதாரக் கூறான குற்ற மனம் தெளிவாக நிரூபிக்கப்படவில்லை.

ஹரிசரன் குர்மி மற்றும் ஒருவர் எதிர் பீகார் மாநிலம் AIR 1964 SC 1184:(1964) S SCR 623 டாக்டர் விமலா எதிர் டெல்லி அட்மினிஸ்ட்ரேசன் AIR 1963SC 1572: (1963) 2 Suppl. SCR 585;திரிம்பக் எதிர் மத்திய பிரதேச மாநிலம் AIR 1954 SC 39; சம்பூதாஸ் என்ற பிஜாய்தாஸ் மற்றும் ஒருவர் எதிர் அஸ்ஸாம் மாநிலம் (2010) 10 SCC 374: (2010)11 SCR 493; நாகப்ப தொண்டியா கலால் எதிர் கர்நாடாகமாநிலம் (1980) Suppl. SCC 336; ஹரியானா மாநில இண்டஸ்டியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேசன் எதிர் கார்க் தயாரிப்பு நிறுவனம் (2007) 8 CC120:(2007)9 SCR 508

வழக்கு சட்ட குறிப்பு

(2010) II SCR 493 – ல் பத்தி 10.1

(1980) Suppl.SCC 336-ல் பத்தி 10.2

(1964) 6 SCR 623-ல் பத்தி 11

(1963) 2 Suppl.SCR 585ல் பத்தி 14

AIR 1954 SC 39 ல் பத்தி 21

(2007) 9 SCR 508 ல் பத்தி 24

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல் முறையீட்டு எண் 1503/2022

12.03.2019 ல் தேதியிட்ட குற்ற மேல் முறையீட்டு எண் 1261/2006 ல் மத்திய பிரதேச உயர்நீதிமன்றத்தின் முதன்மை அமர்வு, ஜபல்பூரால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிற்கு மேல் இந்த மேல் முறையீடானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர் திரு.லாவ்குமார் அகர்வால், செல்வி.ஜோதி மிஸ்ரா, செல்வி.உஷா கார்க், திரு.ராஜேந்திர பிரசாத், திரு. சிவகுமார் வாட்ஸ் ஆகியோர் ஆஜராகினர்.

எதிர்மனுதாரருக்காக வழக்கறிஞர்கள் திரு.ஜோதிப் ராய், கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் திரு. கோபால் ஜா, செல்வி.பாரதி தியாகி , திரு.உமேஷ் குமார் யாதவ் ஆகியோர் ஆஜராகினர்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்பினை வழங்கியவர் **நீதியரசர் திரு. கிரிஷிகேஷ் ராய்,**

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளருக்காக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு.லாவ் குமார் அகர்வால் மற்றும் எதிர்மனுதாரரான மத்திய பிரதேச மாநிலத்திற்காக ஆஜரான கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.கோபால் ஜா, ஆகியோர்களது வாதங்கள் கேட்கப்பட்டது.

3.இந்த மேல்முறையீடானது 12.03.2019 தேதியிட்ட குற்ற மேல்முறையீட்டு வழக்கு எண் 1261/2006 என்ற வழக்கில் மேல்முறையீட்டாளர் இந்திய சாட்சிய சட்டம் (சுருக்கமாக இதச) பிரிவு 411 ன் கீழ் குற்றவாளி என விசாரணை நீதிமன்றம் விதித்த தீர்ப்பினை உயர்நீதிமன்றம் உறுதி செய்ததை எதிர்த்து தொடுக்கப்பட்டுள்ளது. அக்குற்றத்திற்காக மேல்முறையீட்டாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும், (சுருக்கமாக ஆர்.ஐ) ரூ.1000/- அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அபராதம் செலுத்த தவறினால் கூடுதலாக 3 மாத கால கடுங்காவல் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

4. இம்மேல்முறையீட்டில் 4.10.2019 அன்று தண்டனையின் காலவரையறை குறித்து வரையறுக்கப்பட்ட அறிவிப்பு முதலில் கொடுக்கப்பட்டது. ஆனால் மேல் முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தை பரிசீலனை செய்த பின்பு 9/5/22 அன்று தண்டனை குறித்து பரிசீலனை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்தது. முன்னதாக 6/9/19 தேதியிட்ட நீதிமன்ற உத்தரவின் படி மேல்முறையீட்டாளர் சரண் அடைவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டார்.

5. கொலை மற்றும் இதர குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டு வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட சாது சிங் என்ற விஜபான் சிங் படேல் தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கு உட்பட மூன்று மேல்முறையீட்டு வழக்குகளை ஒரே தீர்ப்பின் கீழ் உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மேல்முறையீட்டாளர் மற்றும் சத்ருகன் பிரசாத் ஆகியோர் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்படவில்லை இருப்பினும் அவர்கள் திருடப்பட்ட

சொத்தை வைத்திருந்ததற்காக குற்றம் சாட்டப்பட்டு இதச பிரிவு 411ன் கீழ் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

6. சவாலுக்குட்படுத்தப்பட்ட தீர்ப்பின்படி அரசு தரப்பு வழக்கானது 14/2/2003 அன்று புகார்தாரர் அபய்குமார் ஜெயின் (அ.சா.26) நகரக் கண்காணிப்பாளர், கோட்வாலி, சாட்னாவிடம் கொடுத்த எழுத்து மூல அறிக்கையின் படி தகவல் தெரிவித்தவரின் எக்செல் டிரான்ஸ்போர்ட் ஏஜென்சியின் கீழ் செயல்பட்டு வரும் வீட்டு உபயோகப் பொருட்களை ஏற்றி வந்த சரக்கு வண்டியானது சரக்கு விநியோகம் செய்வதற்காக இந்தோரிலிருந்து சாட்னாவிற்கு சென்றது. 8/2/2003அன்று இந்துாரிலிருக்கும் போக்குவரத்து அலுவலகத்திலிருந்து குர்மேல் சிங் ஓட்டிச் சென்ற சரக்கு வண்டியானது 12/2/2003 வரையிலும் சாட்னாவை சென்றடையவில்லை. 14/2/2003 அன்று சரக்கு வண்டியானது சாட்னாவிக்கும், கல்லா மண்டியில் நின்று கொண்டிருந்ததை அறிந்த தகவாளி வண்டியில் ஏற்றப்பட்ட சரக்குகள் காணாமல் போயிருந்ததை கண்டறிந்தார். முதலில் இதச பிரிவு 406 ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக முதல் தகவல் அறிக்கை குற்ற எண் 183/2003 என்று பதிவு செய்யப்பட்டது. ஆனால் போலிஸ் விசாரணையில் சரக்கு வண்டியின் ஓட்டுனர் சாது சிங் என்ற விஜய்பான் சிங் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்டவர் ராஜி என்ற ராஜேந்திரன் ஆகியோர்லால் கொலை செய்யப்பட்டது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. வண்டியில் ஏற்றப்பட்ட சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டு இவ்வழக்கின் மேல்முறையீட்டாளர் சிவ்குமார் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்வர் என்ற விஜயபாலன் சிங் ஆகியோர்களில் திருடப்பட்ட சொத்து என்பது அறியப்படும் அவர்களால் நேர்மையற்ற முறையில் திருடப்பட்ட சொத்து பெறப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பு வழக்கானது, திருடப்பட்ட சரக்குகளானது இரு குற்றவாளிகளால் மலிவான விலைக்கு விற்கப்பட்டுள்ளது என்பதும் அதன் படி அவர்கள் இதச பிரிவு 411-ன் கீழான குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

7. விசாரணை நீதிமன்றம் கொலை மற்றும் அது சார்ந்த குற்றங்களுக்காக உடன் குற்றம் சாட்டப்பட்ட சாது சிங்கை குற்றவாளி என தீர்ப்பு வழங்கியது. மேலும் மேல்முறையீட்டாளர் சிவ்குமார் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்ட சத்ருகன் பிரசாத் ஆகியோர் திருடப்பட்ட சொத்து என்று நன்கு தெரிந்திருந்தும் சரக்கு வண்டியிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சரக்குகளை பெற்றுள்ளனர் என்பதனை அரசு தரப்பால் நிரூபிக்க இயலும் என்றும் எனவே இரண்டு குற்றவாளிகளும் இதச பிரிவு 411-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை புரிந்துள்ளதாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

8.வண்டியிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சரக்குகளானது மேல்முறையீட்டாளர் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்ட சத்ருகள் பிரசாத் ஆகியோரிடமிருந்து கைப்பற்றுதல் மகஜர் (அ.சா.ஆ 4 மற்றும் அ.சா.ஆ 5) மூலமாக கைப்பற்றப்பட்டுள்ளது என்பதை கற்றறிந்த விசாரணை நீதிபதி குறிப்பிட்டுள்ளார். இரு குற்றவாளிகளும் சரக்குகளை மலிவான விலைக்கு விற்பனை செய்துள்ளது தெரிய வந்துள்ளது. ஆகவே, குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சரக்குகளானது திருடப்பட்ட சொத்துக்கள் என்பது அவர்களுக்கு தெரியும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் படி மேல்முறையீட்டாளர் விசாரணை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு அவருக்கு வழங்கப்பட்ட இதச பிரிவு 411 ன் கீழான தண்டனையானது மேல் முறையீட்டுக்கு உள்ளான தீர்ப்பின் படி உயர்நீதிமன்றத்தால் மேல் முறையீட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

வழக்கறிஞர்களின் வாதங்கள் பின்வருமாறு

9.1 மேல் முறையீட்டாளர் குற்றவாளி என்ற தீர்ப்பின் சட்டப்பூர்வத் தன்மையினை எதிர்த்த கற்றறிந்த வழக்கறிஞர் திரு.லாவ்குமார் அகர்வால் அவர்கள் கைப்பற்ப்பட்ட

சரக்குகள்கொள்ளையடிக்கப்பட்ட வண்டியிலிருந்து திருடப்பட்டவை என்பது குற்றவாளிகளுக்கு தெரியும் என்பது குறித்து எந்த சாட்சியமும் முன்னிலைப்படுத்த அரசு தரப்பு தவறி விட்டதால் இதச பிரிவு 411 ன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்திற்கான அத்தியாவசியக் கூறுகள் எதுவும் தோன்றவில்லை என்று வாதிட்டார். ஆகவே, குற்றம்சாட்டப்பட்டவர் அவர் விற்பனை செயத் பொருளின் தன்மையை அறிந்திருப்பதை நிரூபணம் செய்யப்படும் வரையில் இதச பிரிவு 411ன் கீழ் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையானது சட்டத்தின் கீழ் நிலை நிற்க முடியாதது என்று வாதிடப்பட்டது.

10.1 மற்றொரு புறம் விசாரணை நீதிமன்றத்தின் கருத்தை எதிர்மனுதாரருக்கு ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கோபால் ஜா அவர்கள் ஆதரித்துள்ளார். அவரை பொறுத்த வரையில் குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிறுவுவதற்கு போதுமான ஆதாரங்கள் மற்றும் சாட்சியங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன என்று வாதிடப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் மேல்முறையீட்டிற்கு உள்ளான தீர்ப்பினை உறுதிபடுத்தும் வகையில் *சம்பு தாஸ் என்ற விஜோய் தாஸ் மற்றும் ஒருவர் எதிர் அஸ்ஸாம் மாநிலம்*[1] என்ற வழக்கினை மேற்கோளிட்டுக் காட்டினார். அதில் மாண்புமிகு நீதியரசர் திரு.எச்.எல்.தத்து அவர்கள் அரசியலமைப்பு சட்டத்தின் சரத்து 136 ல் கொடுக்கப்பட்டஅதிகாரத்தினை பயன்படுத்துவது குறித்து தன்னுடைய கருத்தினை கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

> "16 .இந்நீதிமன்றமானது அரசியலைப்பு சட்ட சரத்து 136 ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை உபயோகப்படுத்தும் சமயத்தில் பொருண்மைகள் ஒத்திசைந்து வெளிப்பட்டிருக்கும் பட்சத்திலும் சட்டக் கேள்வி எதுவும் எழாதிருக்கும் பட்சத்திலும் முடிவானது நியாயமானதாக இருக்கும் பட்சத்திலும் உயர்நீதிமன்றத்தின் கண்டுபிடிப்புகளை மீண்டும் திறக்காது. வழக்காடிக்கு அரசியலமைப்பு சட்ட சரத்து 136 ஆனது மேல்முறையீடு செய்யும் உரிமையை

அவருக்கு வழங்கவில்லை. சட்ட விரோதம் அல்லது ஆதாரங்களை தவறாக பொருட்கொள்ளுதல் அல்லது ஆதாரங்களை படிப்பதில் உள்ள தவறு அல்லது முக்கிய ஆதாரங்களை புறக்கணித்தல், விலக்குதல் அல்லது சட்ட விரோதமாக ஏற்றுக் கொள்ளுதல் முதலியவற்றால் கடுமையாக நீதி தவறப்படும் தகுந்த வழக்குகளில் மிகவும் கவனத்துடன் உபயோகப்படுத்த உச்சநீதிமன்றத்திற்கு தன்னிச்சையான அதிகாரத்தினை வழங்கியுள்ளது. "

10.2 ராஜீ என்ற ராஜேந்திரா மற்றும் சாது என்ற விஜய்பான் சிங் ஆகிய பிற குற்றம் சாட்டப்பட்டவர்களின் வெளிப்படுத்துதல் அறிக்கையின் அடிப்படையில் 10/2/2003 முதல் 27/6/2003 அன்று கைப்பற்றப்படும் வரை சொத்தானது மேல்முறையீட்டாளரிடம் தான் இருந்தது என்று அரசு தரப்பு வழக்கறிஞரால் சுட்டி காட்டப்பட்டது. சரக்குகள் மலிவான விலைக்கு விற்கப்பட்டிருப்பதிலிருந்து இதச பிரிவு 411ன் கீழான முக்கிய கூறுகள் மேல்முறையீட்டாளருக்கு எதிராக திருப்தியடையும் வகையில் உள்ளன என்று தர்க்க ரீதியான அனுமானத்திற்கு வழிவகுக்கும். அவரது வாதத்திற்கு ஆதரவாக திரு.ஜா அவர்கள் ' *நாகப்ப தோண்டிபா கலால் எதிர் கர்நாடாக மாநிலம்*[2] என்ற வழக்கை மேற்கோளிட்டுக்காட்டினார். அந்த வழக்கில் மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.முர்தசா பசால் அலி அவர்கள் கீழ் கண்டவாறு கண்டுள்ளார்;

"3 .... இறுதியாக, ஆபரணங்களானது திருடப்பட்ட சொத்து என்பது தெரிந்திருந்தும் மேல்முறையீட்டாளரால் பெறப்பட்டிருப்பதால் அவை திருடப்பட்ட சொத்து என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது ஆகவே குற்றம் சாட்டப்பட்டவர் இந்திய சாட்சிய சட்டத்தின்

பிரிவு 114 ன் கீழான அனுமானத்தின்படியும் இதச பிரிவு 411-ன் கீழும் திருடப்பட்ட சொத்தினை அது திருடப்பட்டுள்ளது என்று தெரிந்திருந்தும் சொத்தினை பெற்றதற்காகத் தண்டிக்கப்படலாம்"

பகுப்பாய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகள்

11. *ஹரிகரன் குர்மி மற்றும் ஒருவர் எதிர் பீகார் மாநிலம்*[3]என்ற வழக்கில் இந்நீதிமன்றம் வெளிப்படுத்துதல் அறிக்கையை நிர்வகிக்கும் சட்டத்தினை விவாதித்துள்ளது.கீழ்கண்டவை கவனிக்கப்பட்டுள்ளன.

"12....ஒரு குற்ற வழக்கில் ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் மற்றொரு குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக அளிக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தை அரசு தரப்பு சார்ந்திருந்தால் அக்குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக இருக்கும் மற்ற ஆதாரங்களை கவனத்தில் கொள்வதே சரியான அணுகுமுறையாகும். ஆதாரமானது திருப்தியளிக்கக் கூடியதாகவும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டினை மேற்படி ஆதாரங்கள் தக்க வைக்கக் கூடும் என்று நீதிமன்றம் கருதினால் மற்ற ஆதாரங்களிலிருந்து எடுக்கப்படும் முடிவானது சரியானது என்று உறுதிபடுத்திக் கொள்ள நீதிமன்றமானது ஒப்புதல் வாக்குமூலத்தினை பரிசீலனை செய்கிறது "

12.இந்த வழக்கில், பொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பினும் அவை திருடப்பட்ட சொத்துக்கள் என்பது பற்றிய அறிவு மேல்முறையீட்டாளருக்கு தெரிந்திருக்க வேண்டும் என்ற முக்கிய கூறினை அரசு தரப்பானது மேலும் நிரூபித்திருக்க வேண்டும். ராஜீ என்ற

ராஜேந்திரா மற்றும சாது சிங் என்ற விஜயபான் சிங் ஆகியோரது வெளிப்படுத்துதல் அறிக்கையினை மட்டுமே சார்ந்திருப்பது இதச பிரிவு 411 ன் கீழ் தண்டிக்கப்படுவதற்கு ஏதுவானதாக இருக்காது.

13.."இதச பிரிவு 411 ன் கீழ் திருடப்பட்ட சொத்தை நேர்மையற்ற முறையில் பெறுபவர்: எந்தவொரு திருடப்பட்ட சொத்தை நேர்மையற்ற முறையில் பெற்றுக்கொண்டாரோ அல்லது தக்க வைத்து கொண்டாரோ, தெரிந்தோ அல்லது அதையே திருடப்பட்ட சொத்தாக நம்புவதற்குக் காரணமோ இருந்தால், மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய ஒரு விளக்கத்துடன் கூடிய சிறைதண்டனையுடன் தண்டிக்கப்படுவார். நன்றாக, அல்லது இரண்டும். மேற்சொன்ன தண்டனை குறித்த பிரிவினை நான்கு பகுதிகளாக பிரிக்கலாம் அவை :- யாரேனும் I. நேர்மையற்ற முறையில் II. திருடப்பட்ட சொத்தை பெற்றாலோ அல்லது வைத்திருந்தாலோ III. தெரிந்திருந்தும் அல்லது IV அவை திருடப்பட்டவை என்று நம்புவதற்கு காரணம் இருந்தாலோ மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய சிறை தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டு தண்டனைகளுமோ விதிக்கப்படும்.

14. “நேர்மையின்றி” என்பது இதச பிரிவு 24 ன் கீழ் "நேர்மையின்றி " என்பது ஒருவருக்கு தவறான ஆதாயம் அல்லது மற்றொரு நபருக்கு தவறான நஷ்டத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் எதை செய்தாலும், அந்தக் காரியத்தை "நேர்மையின்றி" செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. நிச்சயமாக ஒரு குற்றத்திற்கு தீய எண்ணம் என்பது முக்கிய கூறாகும். இதனை மாண்புமிகு நீதியரசர் கே.சுப்பாராவ் அவர்கள் *டாக்டர் விமலா எதிர் பெல்லி அட்மானிஸ்ரேசன்* [4] என்ற வழக்கில் கீழ் கண்ட பத்திகளின் வாயிலாக விளக்கியுள்ளார்.

"9A. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற முழு அமர்வு கோடம்ராஜி வெங்கட்ராடு எதிர் எம்பரர் (*1905) ஐ.எல்.ஆர் 28 மெட் 90, 96, 97)* என்ற வழக்கில் மெட்ராஜ் பல்கலைக்கழகத்தின் மெட்ரிகுலேசன் தேர்வுக்காக அனுமதி பெறுவதற்காக ஒரு நபர் தனியார் விண்ணப்பதாரராக அங்கீகரிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசியரால் அவருக்கு நன்னடத்தை மற்றும அவருடைய 20 வயது குறித்து கையொப்பமிட்ட சான்றிதழை பதிவாளரிடம் சமர்ப்பித்துள்ளது பற்றி பரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. அந்த வழக்கில் தலைமை ஆசிரியரின் கையொப்பத்தை விண்ணப்பதாரர் போலியாக போட்டிருப்பது தெரிய வந்தது. குற்றம் சாட்டப்பட்டவர் மோசடி செய்யும் நோக்கில் போலியாக தயாரித்தல் குறறத்திற்காக குற்றவாளி என்று நீதிமன்றம் முடிவு செய்தது. மாண்புமிகு நீதியரசர் திரு.ஒயிட் அவர்கள் கீழ்கண்டவாறு கண்டறிந்துள்ளார்:-

"ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கமானது நிச்சயமாக ஏமாற்றுவதை விட அதிகமானது"அதனை கீழ் வரும் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கியுள்ளார்:-

" ஏ என்பவர் பி என்பவரிடம் பொய் கூறுகிறார். அதனை பி ஆனவர் நம்புகிறார். B ஆனவர் ஏமாற்றப்பட்டுள்ளார். ஆனால் ஏ ஆனவர் பி - யை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செய்தார் என்று எடுத்து கொள்ள முடியாது என்னை பொருத்த வரையில் ஏ ஆனவர் பி என்பவரிடம் தனது நலனுக்காக ஒரு பொய்யைக் கூறுகிறார். அதனை பி நம்பி அதன்படி செயல்பட வேண்டும் என்று எண்ணுகிறார். மேலும் அவ்வாறு பி செயல்படுவாறாயின் அதன் மூலம் பி என்பவருக்கு இழப்போ தீங்கோ விளைக்கப்படுமாயின் ஏ ஆனவர் பி என்பவரை ஏமாற்றும் நோக்கம் கொண்டுள்ளார். " கற்றறிந்த தலைமை நீதியரசர் அவர்கள் தற்போது வினவப்பட்டுள்ள கேள்விக்கு கீழ் கண்ட

தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இதச பிரிவு 24 ன் படி ஒரு நபர் தவறான லாபம் அல்லது நஷ்டத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு செயலைச் செய்யும் போது அந்த நபர் அச்செயலை நேர்மையற்ற முறையில் செய்கிறார் என்பதை நான் கவனிக்கிறேன் அவ்வாறான எண்ணம் இரண்டையும் எற்படுத்தும் படியாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இந்த வரையறையின் ஒப்புமையின் அடிப்படையில், ஒரு புறம் நன்மையினை அடைய நோக்கம் அல்லது மறுபுறம் மற்றொருவருக்கு வஞ்சகத்தின் மூலம் இழப்பு அல்லது தீங்கு விளைவித்தல் என்பது ஏமாற்றுதல் ஆகும். ஆனால் அந்த வழக்கில் மேற்கூறிய இரண்டு கூறுகளும் இருப்பதை கண்டுள்ளார். நீதியரசர் பென்சன் பத்தி 114-ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

" குற்றம் சாட்டப்பட்டவர் அவருக்கு வஞ்சகத்தால் கிடைக்க கூடிய நன்மைக்காக மட்டுமல்லாமல் அவரது செயல்பாட்டால் பல்கலைக்கழகத்திற்கும், அச்செயல் ஒடுக்கப்படாவிடில் அதன் மூலம் பொதுமக்களுக்கும் ஏற்பட வேண்டிய இழப்பின் காரணமாகவும், அவரது செயல் மோசடியானது என நான் கருதுகிறேன். பல்கலைக்கழகமானது அதன் துணைச் சட்டங்களைத் தவிர்ப்பதன் மூலம், சில நபர்கள் மெட்ரிகுலேசனுக்கு பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்ததாகவும் அதன் அனுகூலங்களைப் பெறுவதற்கு தகுதி உடையவர்கள் என்றும் அறிவிக்க தூண்டப்பட்டால் உண்மையில் அவர்கள் அதன் தேர்வுகளின் மதிப்பிற்குஅந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை எனில் பல்கலைக்கழகத்திற்கு நஷ்டத்தை விளைவிக்கும், உண்மையில் அவர்கள் அதன் தேர்வுகளின் மதிப்பிற்கு சொல்லப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை எனினும் பல்கலைக்கழகத்தின் தேர்ச்சிக்கான சான்றிதழ் மற்றும் அவர்கள் தேர்ச்சி பெற்றதாக பல்கலைக்கழகம் கூறும் நிபந்தனைகளை அவர்கள் உண்மையாக நிறைவேற்றியதற்கான உத்தரவாதம் இல்லை என்று கண்டறியப்பட்டால் பொதுமக்களின்

பார்வையில் தேய்மானம் ஏற்படும்."

நீதியரசர் போதாம் அவர்கள் கற்றறிந்த தலைமை நீதிபதி மற்றும் நீதியரசர் பென்சன் ஆகியோருடன் உடன்பட்டார். இந்த முடிவு ஸ்டீபன் வகுத்துள்ள கொள்கையை ஏற்றுக் கொள்கிறது. அதாவது ஏமாற்றும் நோக்கம் இரண்டு கூறுகளால் ஆனது. முதலாவது, ஏமாற்றும் நோக்கம் மற்றும் இரண்டாவது , ஒரு நபரை காயத்திற்கோ அல்லது காயத்தின் அபாயத்திற்கோ வெளிப்படுத்தும் நோக்கம்; ஏமாற்றுபவருக்கு ஒரு நன்மை அல்லது நன்மையை பெறுவதற்கான நோக்கம் இருப்பது இரண்டாவது நிபந்தனையை பூர்த்தி செய்கிறது என்று இதச பிரிவு 24- ன் கீழ் விளக்கப்பட்டுள்ள. "நேர்மையற்றது " என்பதன் பொருளை ஒப்புமைப்படுத்த கற்றறிந்த நீதிபதிகள் விளைந்தனர்."

15. ஒருவர் திருடப்பட்ட சொத்தை கையாள்கிறார் என்பதை நிறுவ " நம்பிக்கை " என்ற காரணி முக்கியமானதாகும். வெற்றிகரமான அரசு தரப்பு வழக்கிற்கு குற்றம்சாட்டப்பட்டவர் அலட்சியமாக இருந்தார் அல்லது சொத்தானது திருடப்பட்டது என்று அவர் எண்ண காரணம் இருத்தல் அல்லது அவர் பெற்ற சொத்தின் தன்மையை குறித்து போதுமான விசாரணையை அவர் மேற்கொள்ள தவறிவிட்டார் என்பது மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றத்தை நிரூபிக்க போதுமானதாக இருக்காது. வழக்கு சொத்தை முதலில் வைத்திருப்பது சட்டவிரோதமற்றதாக இருக்கலாம். ஆனால் அதனை திருடப்பட்ட சொத்து என்று தெரிந்திருந்தும் வைத்திருத்தல் குற்றத்திற்குரியதாகும்.

16. மேற்சொன்ன கண்ணோட்டத்தின் படி, மேல் முறையீட்டாளர் திருடு போன சொத்துக்களை தான் அவர் கையாண்டிருந்தார் என்பது பற்றி அவருக்கு தெரியும் என்பதனை அ.சா.5., அ.சா.22 மற்றும் அ.சா.24 ஆகியோர்களின் சாட்சியங்களை வாயிலாகவும் குறிப்பாக கைப்பற்றுதல் மகஜரில் வாயிலாகவும் நிரூபிக்கப்பட்டிருப்பதாக அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. கோபால் ஜா அவர்கள் சுட்டிக்காட்டினார். முக்கியமாக

இதில் MP 09/D0559 என்ற எண் கொண்ட சரக்கு வண்டியில் ஏற்றப்பட்ட சரக்குகளின் (பாத்திரங்கள், துணிகள், உள்ளாடைகள் மற்றும மின்சாதனப்பொருட்கள்) மொத்த மதிப்பானது ரூபாய் 12,50,000/- என்று FIR No 407/2003. 02.06.2003)ல் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் 27.6.2003 தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் மேல்முறையீட்டாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களின் (எ..கு பொருட்கள், டார்ச், அலுமினியப் பெட்டி) மதிப்பு வெறும் ரூ.20,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்தின் மதிப்பானது வேறுபாடு உடையதாலும் நிகரற்றதாக உள்ளதாலும் இதச பிரிவு 411 ன் கீழான குற்றச்சாட்டினை அவை ஆதரிப்பதாக இல்லை. மேலும் மேல்முறையீட்டாளர் வழக்கமாக தனது கடையில் பாத்திரங்களை விற்பனை செய்துள்ளார். எனவே அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்களை அவர் வைத்திருந்தது இயற்கைக்கு மாறானதாக இருக்கவில்லை.

17.அடுத்ததாக, குற்றம்சாட்டப்பட்ட சிவகுமார் எ..கு பாத்திரக்கடை வைத்திருந்ததாகவும், சரக்கு வண்டியில் திருடப்பட்ட பொருட்கள் அவரது கடையில் விற்கப்பட்டதாகவும், அரசு தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டுகிறார். இதுபற்றி நிதின் ஜெயின் (அ.சா.5) என்பவரின் சாட்சியம் தொடர்புடையதாகிறது. இருப்பினும் அ.சா.5 ன் சாட்சியத்தில் மேல்முறையீட்டாளரது கடையில் குறிப்பிட்ட அடையாளம் கொண்ட பாத்திரங்கள் விற்பனை செய்யப்படுவதில்லை என்றும் கூறியுள்ளார். மிக முக்கியமாக வண்டியில் கொண்டு வரப்பட்ட பாத்திரங்களின் சிறப்பு குறியீடு பற்றி கொண்டு வரப்பட்ட தனக்கு நினைவில்லை என்றும் கூறியுள்ளார். அ.சா.5-ஐ பொறுத்த வரையில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்து மேல்முறையீட்டாளர் வீட்டில் வைத்து குறிப்பு எடுக்கப்பட்டதா அல்லது பின்னிட்டு தயாரிக்கப்பட்டதா என்பது குறித்து அவருக்கு நினைவுபடுத்த இயலவில்லை. சார்பு ஆய்வாளர், ஜி.பி திவாரி (அ.சா.24) ஐ உடன் குற்றம்

சாட்டப்பட்ட சத்ருகன் பிரசாதின் கடையில் வைத்து சந்தித்ததாகவும் சத்ருகன் பிரசாத்தை கைது செய்த பின்னிட்டே இந்த மேல் முறையீட்டாளரை போலிசார் கைது செய்தனர் என்று மேலும் சாட்சியமளித்துள்ளார். மேல்முறையீட்டாளர் சிவகுமாருக்கு அவரது கடையிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் திருடப்பட்ட பொருட்கள் என்று தெரிந்திருக்கிறது என்பது அ.சா.5 ன் சாட்சியத்தில் ஒரு சிறிய அளவில் கூட நிரூபிக்கப்படவில்லை.

18.மேலும் பரத்சிங் தாக்கூர் (அ.சா.22) என்ற சார்பு ஆய்வாளர், பன்னாகார் என்பவருக்கு துணிகள் மற்றும் பாத்திரங்கள் மிக குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டது பற்றி தகவல் கிடைத்துள்ளது. அ.சா.22 கைப்பற்றுதல் மகஜரில் உள்ளஅவரது கையொப்பத்தை நிரூபிக்கும் சமயத்தில் குற்றம் சாட்டப்பட்ட சிவகுமார் பாத்திரக்கடை வைத்திருப்பதாகவும், குறிப்பாக அவசரத்தினால் கைப்பற்றுதல் மகஜரில் (அ.சா.ஆ 4) முத்திரை குத்தவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். கைப்பற்றுதல் மகஜர் தயாரிப்பதில் குறைபாடுட்ட நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது என்பது அ.சா.22 ன் சாட்சியத்தில் வாயிலாக தெரிகிறது. முக்கியமாக மேல்முறையீட்டாளருக்கு வண்டியிலிருந்து திருடப்பட்ட பொருட்களுக்கும் அவர் பெற்ற பொருட்களுக்கும் தொடர்பு இருப்பதாக தெரியும் என்பது பற்றி அ.சா.22 ன் சாட்சியத்தில் நிரூபிக்கபடவில்லை.

19.அதே போல், அ.சா.24 ஆன ஜி.பி திவாரி, சார்பு ஆய்வாளர் கோட்வாளி காவல் நிலையம், சாட்னா தன்னுடைய சாட்சியத்தில் மேல்முறையீட்டாளர் சிவகுமாரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான கைப்பற்றுதல் நடவடிக்கையை தான் செய்யவில்லை என்று ஒப்புக்கொண்ட சமயத்தில் மேல்முறையீட்டாளருக்கு அவை திருடப்பட்டவை என்பது குறித்து தெரியும் என்று எங்கும் அவர் குறிப்பிடவில்லை.

20. சாட்சிகள் நிதின் ஜெயின் (அ.சா.5), சார்பு ஆய்வாளர் பரத்சிவ் தாக்கூர் (அ.சா22)

மற்றும் சார்பு ஆய்வாளர் ஜி.பி திவாரி (அ.சா.24) ஆகியோர்களின் சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகளும் பளிச்சென்று தெரிகின்றன. உதாரணமாக, அ.சா.5 ன் சாட்சியத்தின் படி பாத்திரங்கள் சார்பு ஆய்வாளர் ஜி.பி.திவாரியால் (அ.சா.24) அ.சா.5 ன் முன்னிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. இருப்பினும் சார்பு ஆய்வாளர் ஜி.பி திவாரி (அ.சா.24) அதிகார வரம்பு பற்றாக்குறையால் எந்த சொத்தையும் தான் கைப்பற்றவில்லை என்றும் கைப்பற்றுதலானது பனகார் காவல் நிலையத்தால்தான் செய்யப்பட்டிருக்க வேண்டுமே தவிர சாட்னாவிலுள்ள கோட்வாளி காவல் நிலைய அதிகாரியால் அல்ல என்றும் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். இதனை தாண்டி ஆச்சரியமிக்க வகையில் கைப்பற்றுதல் நடவடிக்கையின் போது அ.சா.24 சிவகுமாரின் வீட்டில் இருக்கவில்லை என்பது குறித்து சார்பு ஆய்வாளர் ஜி.பி திவாரியின் (அ.சா.24) சாட்சியத்தை சார்பு ஆய்வாளர் பரத்சிங் தாக்கூர் (அ.சா.22) தழுவி சாட்சியமளித்துள்ளார். நிதின் ஜெயினை (அ.சா.5) சிவகுமார் வீட்டில் கைப்பற்றுதல் நடவடிக்கையின் போது சாட்சியாக இருக்க அ.சா.24 அழைக்கவில்லை என்றும் மறுத்துள்ளார். மேலும், சார்பு ஆய்வாளர் ஜி.பி திவாரி அவரால் எழுதப்பட்ட கைப்பற்றுதல் மகஜரை அவரது சாட்சியத்தின் மூலம் ஆதரிக்கவில்லை. மேற்படி குறைபாடுகள் மூலம் கைப்பற்றுதல் குறித்த சாட்சியங்களானது முற்றிலும் நம்பத்தகுந்ததாக இல்லை.

21.திரும்பக் எதிர் மத்திய பிரதேச மாநிலம் [5] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் இதச பிரிவு 411 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்கான அத்தியாவசிய கூறுகளை பற்றி விவரித்துள்ளது. மாண்புமிகு நீதியரசர் திரு மெஹர் சந்த் மஹாஜன் அவர்கள் இதச பிரிவு 411 ன் கீழ் ஒருவரை குற்றவாளி என கொணர்வதற்கு அரசு தரப்பு கீழ்கண்டவற்றை நிரூபிக்க வேண்டும் என்ற தனது ஆழ்ந்த கருத்தை கீழ்கண்டவாறு சரியாக கவனித்துள்ளார்.

"5(1) திருடப்பட்ட சொத்து குற்றம் சாட்டப்பட்டவரின் வசம் இருந்தது (2) குற்றம் சாட்டப்பட்டவர் வசம் அச்சொத்து வருவதற்கு முன்னால் அது அவரல்லாமல் வேறொருவரிடம் இருந்திருக்க வேண்டும், (3) அச்சொத்து திருடப்பட்டது என்பது குற்றம் சாட்டப்பட்டவருக்கு தெரிந்திருக்க வேண்டும்."

22.தற்போதைய சூழ்நிலைகளுக்கு முன்மொழியப்பட்ட சட்ட முன்மொழிவை பயன்படுத்தும் போது, மேல்முறையீட்டாளரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களானது திருடப்பட்டவை என்று அவருக்குத் தெரியும் என்பதனை அரசு தரப்பு நிரூபிக்க தவறிவிட்டது என்பதே தீர்க்கமான முடிவு ஆகும். இதச பிரிவு 411 ன் கீழான குற்றச்சாட்டினை மேல் முறையீட்டாளருக்கு எதிராக நிரூபிக்க தேவையான அத்தியாவசியக் கூறுகள் நிறுவப்படவில்லை.

23.இதுதவிர, மேல்முறையீட்டாளருக்கு பாத்திரங்கள் திருடப்பட்டவை என்பது பற்றிய அறிவு இருந்ததற்கான ஆதாரமாக ஒரு குற்றம் சாட்டப்பட்டவரின் வெளிப்படுத்துதல் அறிக்கை ஐ ஏற்றுக் கொள்ள முடியாது. மேல்முறையீட்டாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பாத்திரங்கள் திருடப்பட்டவை என்பது பற்றி அவருக்கு தெரியும் என்பதற்கான எவ்வித அடிப்படை ஆதாரத்தையும் அரசு தரப்பு நிரூவிக்க தவறிவிட்டது. பாத்திரங்கள் மிக குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதால் மட்டுமே அவை திருடப்பட்டவை என்று மேல்முறையீட்டாளருக்குத் தெரியும் என்ற முடிவிற்கு வர இயலாது. இதச பிரிவு 411 ன் கீழான குற்றச்சாட்டிற்குரிய ஆதாரக் கூறான குற்ற மனம் தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. மெர்க்கண்ட் ஆ..ப் வெனிசிஸ் உள்ள கிராடியானோ என்ற கதாப்பாத்திரத்தை குறித்து " ஒன்றுமில்லாததைப் பற்றி எல்லையற்று நீங்கள் பேசுகீறீர்கள் "[6] என்று குறிப்பிடப்பட்டுள்ளது அரசு தரப்பு சாட்சியங்களுக்கு சரியாக பொருந்தும் வகையில் உள்ளது.

24.இது போன்ற வழக்கில் அடிப்படை ஆதாரங்கள் இல்லாத போது சட்டமானது மேல்முறையீட்டாளரின் பக்கம் சாய்கிறது. ஒரே மாதிரியான முடிவுகளாய் இருந்தாலும் நீதிமன்றமானது சூழ்நிலைகளை நியாயப்படுத்தும் வகையில் அதன் அதிகாரத்தை சரியாக உபயோகப்படுத்த வேண்டும். அது போன்று குற்றத்தில் குற்றமனம் இருந்ததை நிரூபிப்பதற்குத் தேவையான ஆதரவும் இல்லாத பட்சத்தில் மேல்முறையீட்டாளருக்கு நீதி வழங்க வேண்டி சரத்து 136 ல் கொடுக்கப்பட்டுள்ள அசாதாரண அதிகாரமானது உபயோகப்படுத்தப்பட வேண்டும். ஹரியானா மாநிலம் இஸ்டஸ்டிரியல் டெவலப்மண்ட் கார்ப்பரேசன் எதிர் கார்க் மேனுபக்டரிவ் கம்பெனி[7] என்ற வழக்கில் சொல்லப்பட்டிருப்பதை இங்கு எடுத்து கொள்ளலாம்.

25.இந்த சூழ்நிலையில் மேல்முறையீட்டாளர் நேர்மையற்ற முறையில் திருட்டு சொத்தை அவை திருடப்பட்டவை என்று தெரிந்திருந்தும் பெற்றார் என்பதும் அவர் வசம் உள்ள சொத்துக்களானது திருட்டு போனவை என்ற நம்பிக்கையும் அவருக்குண்டு என்பதும் நிரூபிக்கப்படாததால் எங்கள் பார்வையில் இதச பிரிவு 411 ன் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையானது நிலைக்கத்தக்கதல்ல. எனவே, திரும்பக் வழக்கில் சொல்லப்பட்ட சோதனையை இவ்வழக்கில் பொருத்திப் பார்க்கையில் மேல்முறையீட்டாளர் தவறாக தண்டிக்கப்பட்டுள்ளார் என்றே முடிவு கொள்ளப்படுகிறது. ஆகவே நாங்கள் மேல்முறையீட்டாளரை விடுதலை செய்து உத்தரவிடுகிறோம். இந்த உத்தரவின் மேல் முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி,

தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "